தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 9, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

2006 ஆகஸ்ட் 25, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து"

இந்தச் சொல்லை இன்னொரு சொல் வெல்லாது என்று உணர்ந்த பிறகே அந்தச் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. வாழ்த்துரை.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சருக்குப் பிறந்த நாள் வாழ்த்துகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள். (குறுக்கீடு) திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

* **திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுக்கு இன்று பிறந்தநாள் நல்வாழ்த்துகளை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களுடைய சீரிய தலைமையிலே, அவர்கள் இந்த அமைச்சரவையிலே நல்ல பல சீரிய பணிகளை ஆற்றி,

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், இந்த மாநிலத்திற்கும், தோழமைக் கட்சிகளைச் சார்ந்த எங்களுக்கும், இந்த அவையிலே இருக்கின்ற எல்லா உறுப்பினர்களுக்கும் எல்லோருடைய கோரிக்கைகளையும் ஏற்று, நல்ல பல செயல்களைச் செய்து தந்திடவேண்டும் என்று, இறைவன் அருளால் நீண்ட, நெடிய ஆயுளைப் பெற வேண்டும் என்று மனமார இந்த அவையின் சார்பாக வாழ்த்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவர் என்ற முறையிலே என்னுடைய வாழ்த்தையும், பேரவை உறுப்பினர்கள் அத்தனை பேருடைய வாழ்த்துகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

91—

நியாய விலைக் கடை

***440—திரு. கோ. அரி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், வயலூர் ஊராட்சி, சூரகாபுரம் பகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடை தொடங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியத்தில் உள்ள வயலூர் நியாய விலைக் கடையில், 491 குடும்ப அட்டைகள் உள்ளன. சூரகாபுரம் பகுதியில் 112 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. தாய்க்கடைக்கும் மற்றும் உத்தேச பகுதி நேரக் கடைக்கும் இடையே 3 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. மேற்படி பகுதி நேரக் கடை பிரிக்கப்பட்டால், பகுதி நேரக்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS